பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

01 02 2025 **SATURDAY** 12 40**PM**

வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை இன்று மக்களவையில் தாக்கல் செய்தார்.

2. ஏழைகள், விவசாயிகள், மகளிர் மற்றும் இளையோர் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அம்சங்கள் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன.

3. தனிநபர் வருமான வரிக்கான உச்சவரம்பு 12 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

4. குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

5. புற்றுநோய் சிகிச்சைக்கான 36 மருந்துகளுக்கு சுங்கவரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

6. பிரான்ஸில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Tejas Shirse** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<<

ஏழைகள், விவசாயிகள், மகளிர் மற்றும் இளையோர் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மத்திய பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் மத்திய பட்ஜெட்டடை தாக்கல் செய்து அவர் உரையாற்றினார்.

நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக அவர் கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்டு வரும் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பத்து அம்சங்களை அடிப்படையாக கொண்டு இந்த பட்ஜெட் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வேளாண் வளர்ச்சி மற்றும் உற்பத்தி, ஊரகப் பகுதிகளின் மேம்பாடு, வளர்ச்சிப் பாதையில் அனைவரையும் இணைப்பது, சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு ஆதரவு, வளர்ச்சி

அடிப்படையிலான மேம்பாடு, புத்தொழில் முதலீடுகளை அதிகரிப்பது, ஏற்றுமதியை ஊக்குவிப்பது ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த பத்து அம்சங்கள் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரி, மின்சாரம், நகர்ப்புற மேம்பாடு, சுரங்கத்துறை, நிதி, ஒழுங்குமுறை ஆணையங்கள் மற்றும் வேளாண் துறையில் பெரிய அளவில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதிய வருமான வரி மசோதா அடுத்த வாரம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

வேளாண், சிறு குறு தொழில்துறை மற்றும் ஏற்றுமதி துறையின் வளர்ச்சிக்கும் முதலீடுகளை பெறுவதற்கு உத்வேகம் அளிக்கப்படும் என்றார்.

நாட்டின் வளர்ச்சிப் பாதையில் அனைவரையும் ஒருங்கிணைக்கும் நோக்கில் இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வேலைவாய்ப்புடன் கூடிய வளர்ச்சிக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

வறுமையை முற்றிலுமாக அகற்றுவது, தரமான கல்வி, குறைந்த செலவில் உயர்தர சிகிச்சை போன்வற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, வளர்ச்சிடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான இலக்குகளை எட்டுவதே மத்திய அரசின் நோக்கமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

பருப்பு உற்பத்தியில் சுயசார்பினை எட்டும் நோக்கில் ஆறு ஆண்டு காலத்திற்கான இயக்கம் தொடங்கப்படும் என்று கூறிய அவர், உளுந்து, துவரம்பருப்பு மற்றும் மசூர் பருப்புக்கு இதில் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றார்.

சமையல் எண்ணெய் வித்துக்களுக்கான தேசிய இயக்கமும் தொடங்கப்படும்,

உயர் விளைச்சல் விதை ரகங்களுக்கான தேசிய இயக்கம் அறிமுகப்படுத்தப்படும்,

தாமரை விதைக்கான வாரியம் பீகாரில் ஏற்படுத்தப்படும் என்றும் பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கென இயக்கம் ஒன்று தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சேர்ந்த முதல் தலைமுறை தொழில்முனைவோருக்கான கடனுதவி திட்டம் தொடங்கப்படும் என்று கூறிய அவர், இந்த திட்டத்தின் கீழ் அடுத்த ஐந்தாண்டுகளில் 2 கோடி ரூபாய் வரை கடனுதவி வழங்கப்படும் என்றார்.

தோல் துறை மற்றும் காலணி உற்பத்தியின் வளர்ச்சிக்கு உத்வேகம் கொடுக்கப்படும் என்றும், அவற்றின் ஏற்றுமதியை ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிப்பதற்கு வகைசெய்யும் திட்டங்கள் தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பொம்மை உற்பத்தியில் இந்தியாவை சர்வதேச முனையமாக உருவாக்குவதற்கான திட்டம் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உணவு பதப்படுத்துதல் துறையில் பயிற்சி மற்றும் உற்பத்திக்காக தேசிய ஆராய்ச்சி மையம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

நாடுமுழுவதும் 50 ஆயிரம் பள்ளிகளில் அடல் ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின் கீழ் திறன் பயிற்சி வழங்குவதற்கென ஐந்து தேசிய மையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

நாடுமுழுவதும் உள்ள அரசு பள்ளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இணையதள வசதி ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு கல்விக்கென சீர்மிகு மையம் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

மாவட்டந்தோறும் புற்றுநோய் மையங்கள் உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கப்படும்,

நகர்ப்புறங்களுக்கான சவால்களை எதிர்கொள்வதற்கென ஒரு லட்சம் கோடி ரூபாய் முதலீட்டில் நிதியம் ஏற்படுத்தப்படும்,

20 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் சிறிய அளவிலான அணுஉலைகள் அடுத்த எட்டாண்டுகளுக்குள் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும்,

மாற்றியமைக்கப்பட்ட உதான் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்,

இந்த திட்டத்தின் கீழ் 120 வழித்தடங்களில் விமான சேவை வழங்கப்படும்,

முக்கிய கனிமங்களுக்கான கொள்கை ஒன்று வெளியிடப்படும்,

சிறிய அளவில் தொழில் புரிவோருக்கு 5 லட்சம் ரூபாய் உச்சவரம்பை கொண்ட கடன் அட்டைகள் வழங்கப்படும்,

நடைபாதை வியாபாரிகளுக்கு 30 ஆயிரம் ரூபாய் உச்சவரம்பை கொண்ட கடன் அட்டைகள் வழங்கப்படும்,

மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக பத்தாயிரம் இடங்கள் உருவாக்கப்படும்.

தனியார் பங்களிப்புடன் மருத்துவ சுற்றுலா ஊக்குவிக்கப்படும்,

தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கென கல்வி உதவித்தொகை வழங்கப்படும்,

நம் நாட்டின் அறிவுசார் நிபுணத்துவத்தை பாதுகாக்கும் வகையில் தேசிய டிஜிட்டல் தரவு மையம் ஏற்படுத்தப்படும்,

ஏற்றுமதி மேம்பாட்டு இயக்கம் ஏற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

புற்றுநோய் மற்றும் அரியவகை நோய்களுக்கான சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு சுங்கவரியிலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

லித்தியம் பேட்டரிக்கான சுங்கவரி குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

‘வானோக்கி வாழும் உலகெல்லாம்’ என்று தொடங்கும் திருக்குறளையும் மேற்கோள் காட்டி திருமதி. நிர்மலா சீதாராமன் பேசினார்.

(சவுண்ட் பைட் - நிர்மலா சீதாராமன் 26 செகண்ட்ஸ்)

தனிநபர் வருமான வரி உச்சவரம்பு 12 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்தார்.

நிதியமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்ட போது, உறுப்பினர்கள் மேஜையை தட்டி ஒலி எழுப்பினர்.

(சவுண்ட் பைட் மேஜை ஒலி 16 செகண்ட்ஸ்)

இந்த அறிவிப்பு புதிய வருமான வரி திட்டத்திற்கு மட்டுமே பொருந்தும் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

பழைய வருமான வரி திட்டத்தின் கீழ், வரி செலுத்துவோருக்கான உச்சவரம்பு அட்டவணையையும் அவர் விளக்கினார்.

இதன்படி 4 லட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு எவ்வித வரியும் கிடையாது என்று அவர் கூறினார்.

ஆண்டு வருவாய் 4 முதல் 8 லட்சம் ரூபாய் வரை இருந்தால் 5 சதவீதமும், 8 முதல் 12 லட்சம் ரூபாய் வரை இருந்தால் 10 சதவீதமும், 12 முதல் 16 லட்சம் ரூபாய் வரை இருந்தால் 15

சதவீதமும், 16 முதல் 20 லட்சம் ரூபாய்வரை இருந்தால் 20 சதவீதமும், 20 முதல் 24 லட்சம் ரூபாய் வரை இருந்தால் 25 சதவீதமும், 24 லட்சம் ரூபாய்க்கும் கூடுதலாக இருந்தால் 30 சதவீதமும் வரி விதிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

வருமான வரி செலுத்துவோருக்கான வீட்டு வாடகை சலுகைக்கான உச்சவரம்பு 2 லட்சத்து 40 ஆயிரத்திலிருந்து 6 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார்.

வரும் நிதியாண்டிற்கான வருவாய் 34 லட்சத்து 96 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் என்று அவர் கூறினார்.

செலவினங்கள், 50 லட்சத்து 65 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் நிதி பற்றாக்குறை 4 புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

முன்னதாக, திருமதி. நிர்மலா சீதாராமன், குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை சந்தித்துப் பேசினார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூடி பட்ஜெட்டுக்கு ஒப்புதல் அளித்தது.

>>>>><<<<<<

மத்திய பட்ஜெட்டை வரவேற்றும், குறை கூறியும் பல்வேறு கட்சிகளும், அமைப்புகளும் கருத்து தெரிவித்துள்ளன.

சுயசார்பு இந்தியாவிற்கு வலு சேர்க்கும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேளாண் துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் பல்வேறு அம்சங்கள் இதில் இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டினார்.

பருப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேசிய இயக்கம், விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவிடும் என்றும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு வரிவிலக்கு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நடுத்தர வர்க்க மக்களின் எதிர்பார்ப்பு இதன் மூலம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமனுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் மத்திய பட்ஜெட் அமைந்துள்ளதாக லோக் ஜன்சக்தி கட்சியின் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. சிராக் பஸ்வான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், மக்களுக்கான முழுமையான பட்ஜெட் இது என்று குறிப்பிட்டார்.

ஏழை, விவசாயிகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் நலனுக்கான பல்வேறு அம்சங்கள் பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. நித்யானந்த ராய் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பீகார் மாநிலத்திற்கான பல்வேறு திட்டங்கள் இதில் இடம்பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது என்றார்.

இந்த பட்ஜெட் வரவேற்கத்தக்கது என்று தொழில் மற்றும் வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அந்த அமைப்பின் தலைவர் திரு. ஹர்ஷவர்தன் அகர்வால், சுற்றுலா மற்றும் கடல்சார் வர்த்தகத்திற்கு இதில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

வருமான வரிச் சலுகைகளும் வரவேற்கத்தக்கதாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டில் விவசாயிகள் நலனுக்காக பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

ஏழைகள், மகளிர், இளையோர், விவசாயிகள் நலனுக்கான பல்வேறு அம்சங்களும் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாக திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அம்சங்கள் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை என்று காங்கிரஸ் கூறியுள்ளது.

இந்த பட்ஜெட் ஏமாற்றமளிப்பதாக உள்ளது என்று திரிணாமுல் காங்கிரஸ் கருத்து தெரிவித்துள்ளது.

இந்த பட்ஜெட்டில் தமிழகத்திற்கான திட்டங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று திமுக குறை கூறியுள்ளது.

மருத்துவ படிப்புகளுக்கு கூடுதல் இடங்கள் அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியைச் சேர்ந்த திருமதி. கங்காதேவி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - கங்காதேவி 35 செகண்ட்ஸ்)

>>>>><<<<<<

மத்திய பட்ஜெட் குறித்த சிறப்பு நேரலை கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

பட்டயக் கணக்காளர் திரு. அபிஷேக் முரளி, மூத்த பத்திரிகையாளர் திரு. வெங்கடேஷ் மற்றும் ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கும் இந்த நிகழ்ச்சி, இன்றிரவு மணி 8.05-க்கு பிரதான அலைவரிசையில் ஒலிபரப்பாகும்.

>>>>><<<<<<

இனி மகாகும்பமேளா குறித்த செய்திகள்

(சவுண்ட் பைட் - மியூசிக் 8 செகண்ட்ஸ்)

உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் உலகின் மிகப் பெரிய ஆன்மிக திருவிழாவான மகாகும்பமேளாவில் புனித நீராடுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதற்காக விரிவான ஏற்பாடுகளை மத்திய அரசோடு இணைந்து அம்மாநில அரசு மேற்கொண்டுள்ளது.

இன்று மட்டும் இதுவரை 79 லட்சத்திற்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக இதுவரை 31 கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பக்தர்களின் வசதிக்காக போதிய கழிவறை மற்றும் உடைமாற்றும் அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

தூய்மைப் பணியாளர்கள் துப்புரவுப் பணிகளை முழுவீச்சில் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - மியூசிக் 8 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

பிரான்ஸில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Tejas Shirse** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 60 மீட்டர் தடை ஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

இந்தியா - **Togo** இடையேயான டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டி இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

>>>>><<<<<

ஈரானில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Tarun Reddy Katam, Manraj Singh, Siddhanth Gupta** மற்றும் **Aryamann Tandon** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் **Arjun - Vishnuvardhan** இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

>>>>><<<<<

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் 11வது சுற்று முடிவில் இந்தியாவின் குகேஷ் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

>>>>><<<<<

கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது, சச்சின் டெண்டுல்கருக்கு இன்று மும்பையில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் வழங்கப்படுகிறது.

>>>>><<<<<

சிங்கப்பூர் **Smash** டேபிள் டென்னிஸ்போட்டியின் இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் ஆடவர் ஒற்றையர் பிரிவிலும், **Yeshawini Ghorpade** மகளிர் ஒற்றையர் பிரிவிலும் வெற்றி பெற்றனர்.

**>>>>>END<<<<<**